**தவலம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 திசெம்பர் 01 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 பெப்ரவரி 27 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தவலம பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்கின் மீதிகளுக்கிடையே ரூபா 684,567 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் ரூபா 24,585 தொகையான கடை வாடகை மற்றும் ரூபா 179,860 பெறுமதியான வியாபார வரி வருமானம் உட்பட வழங்கல் மற்றும் உபகரணச் செலவினம் ரூபா 78,770 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போது கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 56,888 ஆன ஊழியர் கடன் வட்டி, கடன் கணக்கில் செலவில் பதிவு செய்யப்பட்டமையால் கடன் மீதி சமமான அளவில் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 54,587,339 கூட்டுத்தொகையான 14 கணக்கு விடயங்களுக்குரிய அவற்றின் துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதி என்பவற்றுக்கிடையே ரூபா 11,334,143 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 தொங்கல் கணக்குகள்

03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மாற்றமுராமல் முன்கொண்டு வரப்படும் ரூபா 18,448 கூட்டுத்தொகையான தொங்கல் கணக்கில் காணப்பட்ட வரவு மீதிக்கு சீராக்கல் மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

(i) முன்கொண்டு வரப்படும் ரூபா 538,000 ஆன பெறவேண்டிய வியாபார தொகுதியின் பிணை வைப்பு மீதி மற்றும் ரூபா 8,800 பெறுமதியான நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண மீதி தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) சபை அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக 2011 ஆம் ஆண்டிற்காக ரூபா 777,849 தொகை 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 3,406,400 மற்றும் 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 5,000,000 தொகையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 20 நிர்மாண வேலைகளுக்காக கொடுப்பனவு செய்வதற்கிருந்த ரூபா 9,784,249 தொகையினைத் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் 02 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 577,849 தொகை 2011 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து வரும் மீதியாக இருந்தன.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 29,074,508 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளது வரையாக்கப்பட்ட மற்றும் முறையாக பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடும் ரூபா 157,716 கூட்டுத்தொகையான ஏனைய பொருட்கள் பதிவேடு தொடர்பாக பொருட் பதிவேடும் ரூபா 2,258,021 கூட்டுத்தொகையான முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணத்திற்குரிய பதிவேடுகளும் ரூபா 37,290 தொகையான நூலக அங்கத்துவ பணப் பெறுவனவுப் பதிவேடு போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரீட்சிக்க முடியாமல் இருந்தன.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இனங்காமை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571(1)(2) | 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 827,787 கூட்டுத்தொகையான 22 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 | சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை |
| (ஆ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விட குறைந்த வருமானம் ரூபா 3,990,442 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,129,676 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 5,120,118 ஆல் வீழ்ச்சி தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்வதற்காக சபையின் வருமானத்திலிருந்து ரூபா 4,071,464 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் மீண்டுவரும் வருமானத்திற்கு ஒப்பாக மீண்டுவரும் செலவினத்தில் 124 சதவீதமான உயர் பெறுமதியொன்றை எடுத்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரு ஆண்டுகளுக்குரிய வருமானத்திற்கான உதவிகள், சுய வருமானமீட்டல் மற்றும் மீண்டுவரும் செலவினம் என்பவற்றினது பொழிப்பு பின்வருமாறு,

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான மானியம் | சுய வருமான ஈட்டல் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய உழைப்பு வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 16,817,179 | 12,644,127 | 4,173,052 | 20,807,621 | 16,634,569 |
| 2014 | 18,863,903 | 13,958,683 | 4,905,220 | 17,734,228 | 12,829,008 |
| 2013 | 11,887,489 | 7,459,564 | 4,427,925 | 11,507,780 | 7,079,855 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சபையின் வருமான மானியம் மற்றும் சுய வருமானம் ஈட்டல் என்பன முறையே ரூபா 1,314,556 ஆலும் ரூபா 732,168 ஆலும் வீழ்ச்சியடைந்திருந்தன.

(ii) மீண்டுவரும் செலவினம் தொடர்ச்சியான வேகத்துடன் அதிகரித்த போதும், ஒவ்வொரு ஆண்டிலும் சபையினால் ஈட்டப்பட்ட வருமானத்தை மிகைத்து மீண்டுவரும் செலவினம் குறிப்பிடத்தக்க விதத்தில் அதிகரித்திருந்தது.

(iii) முன்னைய ஆண்டில் சபையில் சுய வருமானமீட்டல் மூன்று மடங்கிலும் மீளாய்வாண்டின் போது சுயமான வருமானமீட்டலில் நான்கு மடங்கிலும் சுயவருமானமீட்டல் உருவாக்க வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் காணப்பட்டதாக தென்பட்டது.

(iv) மீளாய்வாண்டின் மொத்த மீண்டுவரும் வருமானத்தினை விஞ்சிய வருமானம் ரூபா 3,990,442 ஆனு மீண்டெழும் செலவினம் காணப்பட்டது. முன்னைய இரு ஆண்டுகளிலும் வருமான உதவிகள் கிடைக்கப்பெறாதிருந்தால் எந்த வகையிலும் சபையின் வருமானங்களிலிருந்து மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்வதற்கு முடியாத நிலைமையொன்று காணப்பட்டது.

(v) மேற்படி (i) முதல் (iv) வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் விடயங்களின் பிரகாரம் அவ்வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக சபையினால் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் அதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாவிட்டால் பலவீனமான நிதி முகாமைத்துவத்தின் பேரில் சபை தொடர்ந்தியங்கும் தொடர்பாக சிக்கலான நிலையொன்று உருவாகக் கூடுமென கணக்காய்வின் கருத்தாகும்.

(இ) மீளாய்வாண்டினது உள்ளவாறான மூலதன வருமானம் ரூபா 11,528,037 ஆகும். உள்ளபடியான மூலதனச் செலவினம் ரூபா 2,223,156 ஆகியமையால் ரூபா 9,304,881 ஆன மூலதனச் சேமிப்பு காணப்பட்டது. அப்பணத்தை சபை அதிகாரப்பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடியாமல் போனமை மக்களுக்கு ஏற்பட்ட நட்டமொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது

**2.3 வருமான நிர்வாகம்**

-----------------------------------

**2.3.1 ஏக்கர் வரி**

--------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வரித் தொகை முன்னைய ஆண்டிற்காக ரூபா 43,885 ஆன நிலுவை மீதி காணப்பட்டது.

**2.3.2 வியாபார வரி**

--------------------------

நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வியாபார வரி ரூபா 160,050 ஆக இருந்தது.

**2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக கட்டணம்**

--------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணமாக ரூபா 1,971,585 உம் நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 286,436 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

--------------------------------------

**3.1 செயற்திட்டத்தை தாமதப்படுத்தல்**

-----------------------------------------------------------

நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற காணியொன்றில் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக ரூபா 913,423 செலவில் காவல் கூடமொன்றும் செயற்திட்ட அலுவலகமும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் போது உரிய கட்டிடம் அழிவடைந்து இருந்ததுடன் சில உபகரணங்கள் காணாமல் போயிருந்தன. மீளாய்வாண்டினுள் செயற்திட்டத்திற்காக ரூபா 39,700 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்குரிய கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 01 ஆந் திகதி வரையில் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை சோஷசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் xiv ஆம் அத்தியாயத்திற்கு இணங்காமல் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கும் வருமான உத்தியோகத்தருக்கும் செலுத்த வேண்டிய மாற்றுப் பிரயாணப்படி கொடுப்பனவு இரண்டு மடங்காக்கி கொடுப்பனவு செய்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 66,826 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

**3.3. ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஹபராகொடை மேற்கு கபல்ல எல இஹல வீதியை அபிவிருத்தி செய்தல்

மாகாண நிச்சயிக்கப்பட்ட மானியம் (தோட்ட வீதிகள் அபிவிருத்தி செயற்திட்டம்) இன் கீழ் முன்கலவை கற்கள் பிடித்து அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,951,190 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(i) செலவின விடயம் 06 இன் கீழ் ரூபா 1,582,460 தொகை செலுத்தியிருந்த போதிலும் அமுக்க நிலைமை அறிக்கையின் பிரகாரம் தேவையான அமுக்க நிலைமை இல்லாமல் இருந்ததுடன் சில முன்கலவைகளில் சிப்ஸ் கற்கள் தோன்றியிருந்தன.

(ii) இரண்டு பக்கம் முன்கற்களுக்கு கொங்கிரீட் இடுவதற்காக (curbs) ரூபா 255,374 செலுத்தியிருந்த போதிலும், கொங்கிரீட்களில் கற்கள் தோன்றி தற்போது சில இடங்கள் உடைந்திருந்தன.

**(ஆ) கிதுள்தொல வீதி அபிவிருத்தி**

மாகாண நிச்சயிக்கப்பட்ட மானியம் தலங்கல்ல கிதுல் தொல் வீதிக்கு கொங்கீரிட் இடுவதற்காக ரூபா 475,876 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பரிசோதனைக்காக மூன்று மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ஒரு மாதிரியிலும் தேவையான அமுக்க சக்தி காணப்படவில்லை எனினும் அது தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் நிறுத்தி வைத்தல் பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(இ) மயான கூடம்**

மயானகூட கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,280,000 ஆன மதிப்பீட்டிற்கு 2012 ஒக்தோபர் 25 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அந்நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2013 சனவரி 07 ஆந் திகதி உள்ளுராட்சி மன்ற திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 06 ஆந் திகதி மக்களுக்கு கையளிக்கப்பட்ட தகணக்கூடம் 3 ஆண்டுகள் கழிவதற்கு முன்னர் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மக்கள் உரித்திற்கு வழங்கப்பட்டதன் பின்னர் இனங்காணப்பட்ட குறைபாடுகளை பூர்த்தி செய்து தருமாறு பல சந்தர்ப்பங்களில் ஒப்பந்தக் கம்பனியிடமிருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் அக் குறைபாடுகள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கட்டிடத்தை சுற்றி நிர்மாணிக்கப்பட்ட பக்கச்சுவர் மற்றும் கட்டிடத்தை சுவருக்கு இடையே நீர் கசிந்துதிருப்பதால் கூரைக்காக இடப்பட்ட பலகை மற்றும் முன்பக்க கூரைக்கு கம்புகள் முன்கூரைக்கு இடப்பட்ட போலிக் காபனேட் கூரையும் சேதமடைந்திருந்ததது.

(iii) கட்டிடத்தின் கொங்கிரீட் தட்டு (slab) மூலம் நீர் கசிவதால் சுவர் நனைந்து இருந்ததுடன், பிரதான மின் சுற்றும் செயற்படாமல் இருந்தது.

### 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) மனித வள முகாமைத்துவம்

பதவியணியினர் திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 11 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கும் காணப்பட்ட 03 மிகை பதவிகளை முறைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) ஊழியர் கடன்

சபையில் சேவை புரிந்த 11 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 93,087 தொகையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட இரண்டு செலவின விடயங்களிற்காக ரூபா 239,200 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகளும் ஏனைய 05 செலவின விடயங்களில் ரூபா 30,336,367 சேமிப்புக்களும் மற்றுமொரு செலவின விடயமொன்றில் ரூபா 291,033 வரையரையை விஞ்சிய செலவினமும் 06 வருமான விடயங்களில் இலக்கினை அடையாத ரூபா 25,118,834 தொகையான அடையப்படாத இலக்கிடப்பட்ட வருமானமும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றம் 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.வ.வே எனும் இலக்கமுடைய உள்ளூராட்சி ஆணையாளரது (தென்மாகாணம்) சுற்றறிக்கைப் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைப்பதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கீழே காணப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த 05 வாகனங்களது உரித்தைச் கையேற்பதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.5 தீர்த்து வைக்கப்படாத பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுவரும் உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,885,813 ஆன நிலுவை பங்களிப்புத் தொகை மீதியைத் தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.6 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கையில் 2.2.1 ஆம் பந்தியில் ''அ'' முதல் ''ஐ'' வரையான பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகளை தீர்வுசெய்வதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இணக்கம் காணப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) மனித வள முகாமைத்துவம்
(ஊ) வாகனக் கட்டுப்பாடு